**இரத்மலானை பல்கலைக்கழக கல்வி நிறுவனம் - 2022**

---

1. **நிதிக் கூற்றுகள்**

**1.1 அபிப்பிராயம**

இரத்மலானை பல்கலைக்கழக கல்வி நிறுவனத்தின் 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2022 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

கல்வி நிறுவனத்தின் நிதிக் கூற்றுகள் ஊடாக 2022 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

1.3. **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கல்வி நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு வொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கான ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில்,

நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து கல்வி நிறுவனத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது கல்வி நிறுவனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

| | சட்டங்கள், விதிகள் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை | இணங்காமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை<br>I. நிதி ஒழுங்குவிதிக் கோவை 134(3) | தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் உள்ளக கணக்காய்வா-ளரால் உள்ளக கணக்காய்வு பணிகள் மேற்கொள்ளுதல் வேண்டு-மாயினும், கல்லூரி | நிறுவனத்திற்குரியதாக அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கணக்காய்-வாளர் இல்லை என்பதுடன், தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் | உள்ளக கணக்காய்வு மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆரம்பிக்கப்பட்ட 2014 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு வரை உள்ளக கணக்காய்வு மேற்கொண்டு கணக்காய்வு அறிக்கைகளை கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவில்லை. | உள்ளக கணக்காய்வாளரால் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளவில்லை. | |
| II. | நிதி ஒழுங்குவிதி 571 | வைப்புச் செய்யப்பட்ட திகதி தொடக்கம் 02 ஆண்டுகள் விஞ்சிய ரூபா. 195,000 ஆன கேள்வி வைப்புகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | இந்த ரூபா. 195,000 ஆன தொகை அரசாங்க வருமானத்தில் இவ் ஆண்டில் வரவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 2021 மற்றும் 2022 ஆண்டுக்காக வருடாந்த பொருட் மீளாய்வு மேற்கொண்டு அதன் பிரதி கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை | 2022 பொருட் மீளாய்வு மேற்கொண்டுள்ளதுடன், அதன் பிரதி கணக்காய்வாளர் அதிபதியிடம் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் | சுற்றுநிருபம் பிரகாரம் வருடாந்த பொருட் மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 30,291,210 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 29,237,093 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயனில் ரூபா. 1,054,117 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு தொழில்பாட்டு செலவினம் அதிகரித்தல் பிரதான காரணமாகியது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 குழுவிற்கு ஏற்புடையதாக 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பரீட்சைகளின் பொருட்டு அந்தந்த பரீட்சைகளுக்காக 169 மாணவர்கள் விண்ணப்பிக்கப்பட்டிருப்பினும், அதில் 79 மாணவர்கள் குறித்த பாடத்திற்கு எற்புடையதான எழுத்திலான ஒப்படை பணிகள் நிறைவேற்ற-ப்படாமை, பரீட்சைகளின் பொருட்டு 21 மாணவர்கள் தோற்றாமை மற்றும் 07 மாணவர்கள் பரீட்சைகளில் சித்தியடையாமை என்பன | பரீட்சைக்காக விண்ணப்பித்து பரீட்சைகளின் பொருட்டு தோற்றுதல் மாணவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் பொறுப்பு ஆவதுடன், சில மாணவர்கள் பரீட்சைகளுக்கு விண்ணப்பித்து பரீட்சைக்கு தோற்றுவதற்கு முன்னர் கல்லூரியிலிருந்து விலகிச் செல்கின்ற சந்தர்ப்பங்களும் காணக்கூடியதாக உள்ளது. | மாணவர்கள் பரீட்சையில் தோற்றாமை மற்றும் சித்தியடையாமை என்ப-வற்றின் எண்ணிக்கை அதிபரிப்பிற்கான காரண-ங்களை கண்டறிந்து தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | |
|---|---|
| | கணக்கா-ய்வில் அறிய வந்தது. மாணவர்கள் பரீட்சையில் தோற்றாமை மற்றும் சித்தியடையாமை என்பவற்றின் எண்ணிக்கை அதிகரித்திருப்பினும் கல்வி நிறுவனத்தால் அது தொடர்பான பின்னாய்வுகளை மேற்கொள்ளப்படவில்லை. |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெளியக விரிவுரையாளர்களால் கற்கைநெறிகளுக்கு ஏற்புடைய-தாக 39 பாடங்களின் பொருட்டு (Module) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குள் முடிவுறுத்தப்படுதல் வேண்டு-மென்று திட்டமிடப்பட்ட 3,186 போதனை மணித்தியாலங்கள் காணப்படினும், உண்மையாக 1,230 மணித்தியாலங்களிலான போதனைகள் மட்டும் முடிவுறுத்த-ப்பட்டிருந்தன. திட்டமிடப்பட்ட மணித்தியாலங்களுடன் ஒப்பிடு-கையில் பூர்த்தி செய்யப்படாத மணித்தியாலங்களின் எண்ணி-க்கை 13% தொடக்கம் 70% வரையிலான எல்லைக்குள் காணப்பட்டது. | சம்பந்தப்பட்ட பாடவிதான-ங்ளில் ஒவ்வொரு மொடி-யுள்களுக்கும் ஏற்புடை-யதான மணித்தியாலங்-களின் எண்ணிக்கை முடிவுறுத்தப்படாத நிலை-யானது, நாட்டில் நிலவிய கோவிட் தொற்று நோய், பொருளாதார பிரச்சினை, மின்சாரம் துண்டிக்கப்ப-டுதல் போன்ற காரணங்-களினால் ஏற்பட்டவைகளாகும். | பாடவிதானங்கள் முடிவுறுத்தும் வகையில், உரிய மணித்தியாலங்களின் எண்ணிக்கைக்கு அமை-வாக போதனைகள் நடாத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | தொழில்சார் தொழில்நுட்ப கல்லூரியால் பல்கலைக்கழக நிறுவனங்களுடன் உரிய ஒருங்கிணைப்பு மேற்கொள்ளாமை காரணமாக, இரத்மலானை பல்கலைக்கழக கல்லூரி பொரு-ட்டு மாணவர்கள் விண்ணப்பிக்கும் முன்னேற்றம் 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் 44% ஆல் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், 18 மாணவர்கள் ஆரம்ப காலப்-பகுதியில் கற்கைநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். அதே-போன்று 2022 ஆம் ஆண்டுக்காக குறித்த ஆண்டில் செப்தெம்பர் மாதத்தில் மாணவர்களை ஆட்-சேர்ப்புச் செய்யும் நடவடிக்கை-களை மேற்கொள்ளுதல் வேண்டுமாயினும், கணக்காய்வு திகதியான 2023 சனவரி 26 ஆம் திகதியில் மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்கின்ற பணி முடிவுறுத்தப்படவில்லை. | மாணவர்கள் தொழில்சார் தொழில்நுட்ப கல்லூரியில் பட்டப்படிப்பு கற்கை-நெறிகளில் பதிவாகுவதற்கு எமது கற்கைநெறிகளை விட்டுச் சென்றிருந்தனர். | மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்கின்ற நடவடிக்கைகள் உரிய திட்டம் பிரகாரம் மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.3 பயனற்ற அல்லது குறைபயன்பாட்டுடன் கூடிய சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| உணவு தொழில்நுட்ப ஆய்வுகூடத்தில் காணப்பட்ட ரூபா. 147,400 பெறுமதியான Automatic Water Distiller உபகரணம் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு வரை உபயோகமின்றி பயனற்று காணப்பட்ட-துடன், உபகரணத்தின் உத்தரவாதக் காலமும் முடிவடைந்திருந்தது. | இந்த உபகரணம் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டதுடன், அதனை செயற்படுத்துவதற்காக எமது நிறுவ-னத்தின் உணவு தொழில்நுட்ப ஆய்வகத்தை உரிய வகையில் நிருமாணிக்கப்படவில்லை. இந்த உபகரணத்தின் தற்கால சந்தைப் பெறுமதி, அதனை கொள்வனவு செய்த காலத்திலும் பார்க்க அதிகமாகும். ஆகையால் ஆய்வு-கூடத்தின் பணிகளை முடிவுறுத்தும் வரை இந்த உபகரணம் பாதுகாப்பாக நிறுவனத்தில் வைக்கப்படும். | வளங்களை வினைத்திற-னாகவும் பயனுள்ளதாகவும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

## 3.4 கருத்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | திறன் துறைசார் அபிவிருத்தி (SSDP) நிகழ்சித்திட்டத்தின் கீழ் 2021 ஆம் ஆண்டில் 03 பணிகளை நிறைவேற்று-வதற்காக கிடைக்கப்-பெற்றிருந்த ரூபா.மில்.5.8 ஆன தொகை கணக்-காய்வு திகதியான 2023 பெப்ருவரி 08 வரை பயன்படுத்தப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டின் செற்றிட்டம் பிராகரம் இந்த கட்டிடம் வகுப்பு அறை மற்றும் உணவு தொழில்நுட்ப விரிவுரையாளர்-களுக்காக ஒதுக்குவதற்கு திட்ட-மிடல்<br><br>கல்விசார் பதவியணியால் பிரயாணங்கள் மற்றும் சுற்றுலா கற்கைநெறி பொருட்டு இரண்டு மொடியுள்களை அறிமுகப்படுத்து-வதற்கு பிரேரணை செய்யப்படினும், நடைமுறை பிரச்சினைகள் காரணமாக நடைமுறைப்படு-த்துவதற்கு முடியாதிருத்தல்.<br><br>மாணவர் கற்கை முகாமைத்துவ முறைமை அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்தல் மேற்கொள்-ளப்பட்டதுடன், நிறுவனம் எதிர்-பாரத்த முறைமை வழங்குவதற்கு வழங்குநர் தவறியதன் காரணமாக முடிவுறுத்துவதற்கு இயலாதிருத்தல். | கடன் நன்கொடை மூலம் வழங்கும் ஒதுக்கீட்டில் ஆகக்கூடிய பயன் கிடைக்கக்கூடிய வகையில் நடவடிக்கை மேற்கொள்ளதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2022 ஆண்டுக்காக ரூபா.மில்லியன் 07 ஆன மூலதன ஒதுக்கீடுகளின் கீழ் உணவு தொழில்நுட்ப ஆய்வகம் நவீனமயப்ப-டுத்தல், மாணவர் கற்கை முகாமைத்துவ முறைமை-யின் அபிவிருத்தி மற்றும் நடைமுறைப்படுத்தல், கற்கை பொறுப்புகள், குழுக்களின் வேலைகள் மற்றும் ஆராய்ச்சிகளு-க்கான செயலமர்வுகளை நடாத்தல் போன்ற பிரதான 03 மூலக் கூறுகளை நிறைவேற்று-வதற்கு ஒதுக்கீடு செய்திருப்பினும், அப் பணிகள் ஆண்டில் நிறைவேற்றப்படவில்லை. | இந்த கருத்திட்ட பிரேரணைகள் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக தாமதமாகியுள்ளன. | கருத்திட்ட பிரேரணை-களை நடைமுறைப்படுத்-துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.5 மனித வளங்களின் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| கல்லூரியால் நடாத்தப்படுகின்ற NVQ Level 05 மற்றும் 06 இற்காக ஆகக்குறைந்தது இரண்டு விரிவுரையா-ளர்கள் படி இருத்தல் வேண்டுமாயினும், அதில் 04 கற்கைநெறிகளின் பொருட்டு ஒரு விரிவுரையாளர் என்ற வகையில் மட்டும் இருப்பதாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | மேற்படி ஆட்சேர்ப்புகள் மேற்கொள்-வதற்கு தேவையான நடவடிக்கைகள் கல்லூரி மட்டத்தில் மேற்கொண்டு-ள்ளதுடன், அமைச்சின் அனுமதி கிடைக்கப்பெறாமையால் இதுவரை ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்படவில்லை. விரிவுரையாளர்களின் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கும் அமைச்சின் அனுமதி கிடைக்கப்பெறவில்லை என்பதுடன், வெளியக விரிவுரையாள-ர்கள் மூலம் உரிய பாடங்கள் கற்பித்தல் மேற்கொள்ளப்படுன்றன. | உரிய கற்கைநெறிகளுக்கு ஆகக்குறைந்ததாக இருக்க வேண்டிய விரிவுரையாளர்களின் எண்ணிக்கை ஆட்-சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |